இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

ஞாயிற்றுக்கிழமை 11.10.2026

விஜய் காலைச் சுற்றும் சொத்து வழக்கு!

தூயசக்தி விஜய் என்ன செய்திருக்கிறார் தெரியுமா? தனது சொத்துக் கணக்கை பல்வேறு தவறுகளுடன் காட்டி இருக்கிறார். மறைத்திருக்கிறார்.

இவ்வளவையும் செய்து விட்டு நீதிமன்றத்தில் என்ன சொல்லி இருக்கிறார் தெரியுமா? "வேட்புமனுவில் எந்தத் தகவலையும் மறைக்க வில்லை. அனைத்து விபரங்களையும் 99 விழுக்காடு வேட்புமனுவில் குறிப்பிட்டுள்ளேன். ஒரு சில தவறுகள் இருக்கலாம். அதற்காக வேட்புமனுவை ஏற்றதே தவறு என்று சொல்ல முடியாது." என்று விஜய் தரப்பு வழக்கறிஞர் சொல்லி இருக்கிறார்.

99 விழுக்காடு அனைத்து விபரங்களையும் சொல்லி விட்டாராம். ஒவ்வொரு வேட்பாளரும் தனது சொத்துக் கணக்கில் 99 விழுக்காடு சொன்னால் போதும் என்று சொல்கிறதா சட்டம்? இப்படிச் சொல்வதற்கு கூச்சமே இல்லையா?

'ஒரு சில தவறுகள் இருக்கலாம்' என்றும் விஜய் தரப்பு வாதிட்டுள்ளது. இது எப்படி இருக்கிறது என்றால், 'திருவிளையாடல்' படத்தில் தருமி சொல்வாரே, 'பாட்டில் எவ்வளவு தவறுகள் இருக்கிறதோ, அதற்கான மதிப்பைக் குறைத்துக் கொண்டு பரிசுப் பொருளைக் கொடுங்களேன்' என்று சொல்வதைப் போல இருக்கிறது. இது என்ன படமா?

'ஒரு சில தவறுகள் இருக்கலாம்' என்று சொன்னால் என்ன பொருள்? அப்படியானால், தவறுகள் இருப்பதை, சொத்துக்களைத் திருத்தியதில், திரித்ததில், மறைத்ததில் உண்மை இருக்கிறது என்பதை விஜய் ஒப்புக் கொள்கிறார் என்று பொருள்.

முதலமைச்சர் விஜய் மீது வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சாதாரணமானவை அல்ல. சென்னை உயர்நீதிமன்றத்தில் பெரம்பூர் வாக்காளர் தினேஷ் தாக்கல் செய்துள்ள மனுவில்..

1. விஜய் தனது வேட்புமனுவில் கொடைக்கானல் வில்பட்டியில் உள்ள அரசு புறம்போக்கு நிலத்தை தனது நிலம் எனச் சொல்லி இருக்கிறார். அரசுப் பதிவேட்டில் அந்த நிலம் அரசு புறம்போக்கு நிலமாகவே இன்னமும் இருக்கிறது. 1997 ஆம் ஆண்டு அதனை 30 ஆயிரம் ரூபாய்க்கு வாங்கியதாகச் சொல்வது தவறான தகவல் ஆகும்.
2. சென்னை நீலாங்கரையில் உள்ள வீடு தனக்கு வாரிசுரிமை வாயிலாக பெறப்பட்டதாக விஜய் சொல்கிறார். ஆனால் அந்தச் சொத்து 2005 ஆம் ஆண்டு அவரது தந்தை சந்திரசேகர் பதிவு செய்து கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரம் மூலமாக பெறப்பட்டது ஆகும். இதுவும் தவறான தகவல்.
3. நீலாங்கரை வீடு 17,100 சதுர அடி நிலம் மற்றும் 5,500 சதுர அடி கொண்ட அந்த வீட்டின் மதிப்பு ரூ.2.75 கோடி என்று பத்திரத்தில் குறிப்பிடப்பட்டு உள்ளது. ஆனால் விஜய் தனது வேட்புமனுவில் 18,633 சதுர அடியில் கட்டுமானம் கட்ட 18.73 கோடி ரூபாயைச் செலவிட்டு உள்ளதாகவும், தற்போது அதன் மதிப்பு ரூ.20 கோடி என்றும் சொல்லி இருக்கிறார்.
4. கடந்த 2010 ஆம் ஆண்டு சென்னை போரூரில் 34,000 சதுர அடி கொண்ட விவசாய நிலத்தை 91.13 கோடி ரூபாய்க்கு வாங்கியதாகக் கூறியுள்ளார். ஆனால் பதிவுத்துறை ஆவணங்களின் படி 7.5 கோடி ரூபாய்க்கு 20,773 சதுர அடி நிலம் மட்டுமே வாங்கி இருக்கிறார்.
5. சென்னை பாடியில் 23,460 சதுர அடி வணிக வளாகத்தை ரூ.35 கோடிக்கு விற்பனை செய்துள்ளார் விஜய். ஆனால் இந்த சொத்து ரூ.7 கோடிக்கு விற்கப்பட்டதாக அதன் மதிப்பை குறைத்துக் காட்டி இருக்கிறார்.
6. பண்ருட்டியில் உள்ள ரூ.30 கோடி மதிப்புள்ள சொத்தை விஜய் தனது வேட்புமனுவில் மறைத்துள்ளார்.

-இப்படிஅடுக்கடுக்கானகுற்றச்சாட்டுகள்விஜய்மீதுவைக்கப்பட்டுள்ளன. சொத்துக்களை மறைத்தும், மதிப்பைக் குறைத்தும் தவறான தகவல்களைத் தெரிவித்துள்ளதால் பெரம்பூர் தொகுதியில் அவர் வெற்றி பெற்றது செல்லாது என்று அறிவிக்கக் கோரியே வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

ஒரு வேட்பாளர் வேட்புமனுவில் தவறான தகவலை அளிக்கவோ, தகவலை மறைக்கவோ கூடாது. அது சட்டப்படி குற்றம் ஆகும். இதைத்தான் வாக்காளர் தினேஷ் தரப்பு குற்றச்சாட்டாக வைக்கிறது. இதற்கு பல்வேறு உச்சநீதிமன்றத் தீர்ப்புகளை ஆதாரமாக நீதிமன்றத்தில் தினேஷ் தரப்பு வழக்கறிஞர் வைத்துள்ளார்.

"எந்த ஒரு தவறான தகவலும், முழுமையான தகவலும், போலியான தகவலும், ஒரு பக்க சார்புடைய தகவலும், தவறான முடிவுக்கு இட்டுச்செல்லும் தகவலும்.... சுதந்திரமாக வாக்கு செலுத்துவதற்கு வாக்காளருக்கு இருக்கும் உரிமையில் நிச்சயமாகக் குறுக்கிடும்... யாருக்கு வாக்களிக்க வேண்டுமென்கிற அவருடைய தெரிவையும் பெருமளவில் முடிவு செய்யும்." - என்று 2009 ஆம் ஆண்டு உச்சநீதிமன்ற நீதிபதி ராமசுப்பிரமணியம் தீர்ப்பு அளித்துள்ளார். இந்தத் தீர்ப்பை அதே உச்சநீதிமன்றம் 2015 ஆம் ஆண்டும் உறுதி செய்திருக்கிறது.

இந்த வாதங்களை வைத்ததும் நீதிபதி லட்சுமி நாராயணன், முதலமைச்சர் விஜயின் வழக்குரைஞர் பக்கம் திரும்பி, "வழக்கின் தன்மை முற்றிலுமாக மாறிவிட்டது. நீதிபதி ராமசுப்ரமணியன் அளித்திருக்கும் தீர்ப்பைப் பாருங்கள்" என்று சொல்லி இருக்கிறார். இந்த வழக்கில் அக்டோபர் 14ஆம் தேதி தீர்ப்பு தர இருக்கிறது நீதிமன்றம்.

இந்த வழக்கில் வரப்போகும் தீர்ப்பும், ஒருவேளை வழக்கு உச்சநீதிமன்றம் வரை போனாலோ அது விஜய் பதவியைப் பறிக்கும் வகையில் ஆகலாம். சொத்தை மறைத்து தேர்தலில் போட்டியிட்டு வென்ற பலரது வெற்றிகள் செல்லாது என்று அறிவிக்கப்பட்டுள்ளன.

மகாராஷ்டிராவில் கிசான் சங்கர் கதோரே, தெலுங்கானாவில் வனமா வெங்கடேஸ்வர ராவ், கர்நாடகாவில் எஸ்.என்.சுப்பாரெட்டி ஆகியோர் "சொத்தைமறைத்தகாரணத்தால்வெற்றிசெல்லாது"என்றுஅறிவிக்கப்பட்டு பதவி இழந்தவர்கள் ஆவார்கள். அந்த வரிசையில் விஜய் காலை, சொத்து வழக்கு சுற்றி இருக்கிறது.

●●

ஒடுக்கப்பட்ட மக்களுக்காக வாழ்நாளை அர்ப்பணித்தவர்

நோபல் பரிசுக்குத் தேர்வான நவநீதம் பிள்ளைக்கு வாழ்த்துகள்!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, அக்.11-

ஒடுக்கப்பட்ட மக்களுக்காகவும், குரலற்ற வர்களின் உரிமைக்காகவும் தமது வாழ்நாளையே அர்ப்பணித்தவர் நோபல் பரிசுக்கு தேர்வு செய்யப்பட்ட நவநீதம் பிள்ளை அவர்கள் என்று குறிப்பிட்டு, கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்ட சமூக வலைதளப்பதிவில், தமது நெஞ்சார்ந்த வாழ்த்துகளை பதிவிட்டுள்ளார்.

இதுகுறித்து, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தளப் பதிவு வருமாறு:-

"2026ஆம் ஆண்டுக்கான அமைதிக்கான நோபல் பரிசுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ள திருமிகு நவநீதம் பிள்ளை அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த வாழ்த்துகள்!



ஒடுக்கப்பட்ட மக்களுக்காகவும், குரலற்றவர்களின் உரிமைகளுக்காகவும் தமது வாழ்நாளையே அர்ப்பணித்த அவரது நெடிய பயணத்திற்குக் கிடைத்துள்ள அங்கீகாரம் இது!

2012ஆம் ஆண்டு ஜெனீவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் அவையில் அவரைச் சந்தித்து, ஈழத்தமிழர்களின் துயர்மிகுந்த வாழ்வையும், நீதிக்காகவும் கண்ணியமான வாழ்வுக்காகவும் அவர்கள் நடத்திவரும் போராட்டத்தையும் எடுத்துரைத்ததை இத்தருணத்தில் நெகிழ்வுடன் நினைவுகூர்கிறேன்.

நிறவெறிக்கு எதிரான போராட்டத்தில் தொடங்கி, உலகெங்கிலும் மனித உரிமைகளுக்காகக் குரல்கொடுப்பது வரை, துணிச்சலும் கொள்கை உறுதியும் நிறைந்தது அவரது பயணம்!

மனித உரிமைகளுக்காகவும் நீதிக்காகவும் அவர் ஆற்றிவரும் பணி, வருங்காலத் தலைமுறைகளுக்கும் தொடர்ந்து ஊக்கமளிக்கட்டும்!

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

காவிரி நீர்ப் பங்கீட்டு அளவை மறுஆய்வு செய்யக் கோரும்

கர்நாடகத்தின் முயற்சியை முறியடிக்க வேண்டும்!

எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அறிக்கை!

சென்னை, அக்.11-

காவிரி நீர்ப் பங்கீட்டு அளவை மறு ஆய்வு செய்ய வேண்டும் என்றும், கர்நாடக அரசின் முயற்சியை முறியடிக்க வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-

காவிரி நடுவர் மன்றத்தால் இறுதி உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, `உச்சநீதிமன்றத்தால் உறுதிசெய்யப்பட்டுள்ள காவிரி நதிநீர்ப் பங்கீட்டை மறுபரிசீலனை செய்ய வேண்டும்' என்று கர்நாடக மாநில அரசு உச்ச நீதிமன்றத்தில் முறையிட்டு இருப்பதற்கும், தமிழ்நாட்டு விவசாயிகளின் நலனைப் பாதிக்கும `மேகதாது அணை கட்டியே தீருவோம்' என அடம்பிடித்துக் கொண்டிருப்பதற்கும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1970ஆம் ஆண்டிலேயே, டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையிலான தமிழ்நாடு அரசு, காவிரி நீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக, காவிரி நடுவர் மன்றம் அமைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்து, 1990ல் அமைக்கப்பட்ட காவிரி நடுவர் மன்றம், முதலில் தமிழ்நாட்டிற்கு 205 டிஎம்சி வழங்கும் இடைக்காலத் தீர்ப்பை வழங்கியது.

அத்தீர்ப்பைச் செயல்படுத்தாமல் இருக்க "கர்நாடகா காவிரி நீர்ப்பாசனப் பாதுகாப்பு அவசரச் சட்டம், 1991ஐ" கர்நாடக அரசு கொண்டு வந்தது. அதனை உச்சநீதிமன்றம் ரத்து செய்தது.



நடுவர் மன்றமும் கர்நாடக அரசின் எதிர்ப்பும்!

இதன்பிறகு, 2007ல் காவிரி நடுவர் மன்றம் இறுதித் தீர்ப்பை வழங்கியது. அதை எதிர்த்தும் கர்நாடக அரசு மேல்முறையீடு செய்து 2018ல் உச்ச நீதிமன்றமே காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பை சில மாற்றங்களுடன் உறுதிசெய்தது.

மேலும், காவிரி ஆற்றுப்படுகையில் 50 சதவிகித நம்பகத்தன்மை அடிப்படையில், அனைத்து அம்சங்களையும் ஆய்வுசெய்து, பயன்படுத்தக்கூடிய மொத்த நீரின் அளவு 740 டிஎம்சி என நடுவர் மன்றம் நிர்ணயித்ததை ஏற்றுக்கொண்டது.

நீர்ப் பங்கீட்டில் மட்டும் சிறிய மாற்றத்தைச் செய்து, தமிழ்நாட்டிற்கு 404.25 டிஎம்சி மற்றும் கர்நாடகாவிற்கு 284.75 டிஎம்சி என நீர்ப் பங்கு ஒதுக்கீட்டை உறுதி செய்தது.

எனவே, காவிரி நதிநீர்ப் பங்கீடு என்பது முடிவு பெற்ற இறுதியான ஒதுக்கீடு. ஆகவே, அப்படி உறுதி செய்யப்பட்ட காவிரி நீர்ப் பங்கீட்டை மறுபரிசீலனை செய்யவும், மறுபங்கீடு செய்யவும் கர்நாடகா கோருவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

கர்நாடக அரசின் வீண் பிடிவாதம்!

அதேபோல, மேகதாது அணை கட்டும் முயற்சிக்கு எதிராகத் தமிழ்நாடு சட்டமன்றத்தில் பலமுறை தீர்மானம் நிறைவேற்றப்பட்டும், "அணை கட்டியே தீருவோம்" என்று கர்நாடக அரசு தொடர்ந்து வீண் பிடிவாதம் செய்துவருவது, இரு மாநில நல்லுறவுகளுக்கும் ஏற்றதல்ல.

ஏற்கெனவே, `மேகதாது அணை கட்டுவது தொடர்பான பிரச்சினைக்கு 1956ஆம் ஆண்டு பன்மாநில நதிநீர் தாவாச் சட்டத்தின் கீழ் நடுவர் மன்றம் அமைக்க வேண்டும்' என கடந்த மார்ச் 4 அன்று, அன்றைய முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் தலைமையில், ஒன்றிய ஜல் சக்தி அமைச்சகத்திடம் விரிவான கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜூன் 19 அன்று, தமிழ்நாடு சட்டபேரவையில் `மேகதாது திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து, இப்பிரச்சினைக்கு நடுவர் மன்றம் அமைக்க வேண்டும்' என்று தீர்மானமும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

காவிரி ஆறு, தமிழ்நாட்டின் காவிரி டெல்டா பகுதிக்கு உயிர்நாடியாக உள்ளது. இலட்சக்கணக்கான விவசாயிகளின் வாழ்வாதாரமும், தமிழ்நாட்டின் வேளாண் பொருளாதாரமும் காவிரி நீரைச் சார்ந்துள்ளன.

முதலமைச்சர் வேடிக்கை பார்க்கக் கூடாது!

எனவே, ஏற்கெனவே சட்டரீதியாகத் தீர்மானிக்கப்பட்ட இறுதி வடிவம் பெற்ற காவிரி நீர்ப்பங்கீட்டை மறுபரிசீலனை செய்ய முயல்வது, தமிழ்நாட்டின் நலன்களைப் பாதிக்கக்கூடிய மேகதாது அணை திட்டத்தை மேற்கொள்வதை முதலமைச்சர் வேடிக்கை பார்க்கக் கூடாது. கர்நாடகாவின் இந்த முயற்சியை முதலமைச்சர் உறுதியாக எதிர்க்க வேண்டும்.

இது தொடர்பான உச்ச நீதிமன்ற வழக்கு குறித்து உடனடியாக அதிகாரிகளுடன் ஆய்வுசெய்து, மூத்த வழக்கறிஞர்களை நியமித்து, தமிழ்நாட்டின் உரிமை எவ்விதத்திலும் பாதிக்கப்படாமல் இருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும், தமிழ்நாடு வரும் பிரதமர் அவர்களிடம், `மேகதாது அணை விவகாரத்தில் நடுவர் மன்றம் அமைக்கும் கோரிக்கையை வலியுறுத்த வேண்டும்' என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

காவிரி நீர்வரத்து சரிவு: டெல்டாவில் நெல் சாகுபடி பாதிப்பு!

த.வெ.க. அரசு மெத்தனம் – விவசாயிகள் கவலை!

தஞ்சை, அக். 11-

தென்மேற்குப் பருவமழை காலத்தில் தமிழகத்திற்குக் கிடைக்க வேண்டிய காவிரி நீரில் 79 டி.எம்.சி நீர் பற்றாக்குறை ஏற்பட்டு, 14 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு நீர்வரத்து சரிந்துள்ளது. இதனால் மேட்டூர் அணை நீர்மட்டம் சரிந்து, டெல்டா மாவட்டங்களில் நெல் சாகுபடி பரப்பு சுமார் ஒரு லட்சம் ஏக்கர் வரை குறைந்துள்ளது.

தென்மேற்குப் பருவமழை காலத்தில் தமிழகத்திற்குக் கிடைக்க வேண்டிய காவிரி நீரின் அளவு கடந்த 14 ஆண்டுகளில் இல்லாத அளவுக்குக் கடுமையான சரிவைச் சந்தித்துள்ளதாகத் 'தி இந்து' நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது. வழக்கமாகப் பெறப்பட வேண்டிய 123.14 டி.எம்.சி நீருக்குப் பதிலாக, வெறும் 44.208 டி.எம்.சி நீர் மட்டுமே கிடைத்துள்ளதால் 79 டி.எம்.சி நீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. மேட்டூர் அணையின் தற்போதைய நீர் இருப்பு இன்னும் 18 நாட்களுக்கு மட்டுமே போதுமானது என்பதால், டெல்டா மாவட்டங்களில் குறுவை மற்றும் சம்பா சாகுபடி பணிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டு, நெல் சாகுபடி பரப்பு கடந்த ஆண்டை விட ஒரு லட்சம் ஏக்கர் வரை குறைந்துள்ளதாக அந்தச் செய்தி சுட்டிக்காட்டுகிறது.

தென்மேற்குப் பருவமழை காலத்தில் (ஜூன் முதல் செப்டம்பர் வரை) தமிழகத்திற்கு வர வேண்டிய காவிரி நீரின் அளவு கடந்த 14 ஆண்டுகளில் இல்லாத அளவுக்குக் கடுமையான சரிவைச் சந்தித்துள்ளது. கடந்த நான்கு மாதங்களில் வழக்கமாகத் தமிழகத்திற்குப் பெறப்பட வேண்டிய 123.14 டி.எம்.சி நீருக்குப் பதிலாக, வெறும் 44.208 டி.எம்.சி நீர் மட்டுமே கிடைத்துள்ளது. இதன் காரணமாகத் தமிழகத்திற்குக் கிடைக்க வேண்டிய காவிரி நீரில் சுமார் 79 டி.எம்.சி நீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. 1974-75 ஆம் ஆண்டிற்குப் பிறகு பதிவான மிகக் குறைந்த காவிரி நீர்வரத்துகளில் இது 4-வது இடத்தைப் பிடித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

தற்போது மேட்டூர் அணையின் நீர் இருப்பு 36.639 டி.எம்.சி ஆக உள்ள நிலையில் (அணையின் மொத்த கொள்ளளவு 93.47 டி.எம்.சி), குடிநீர் தேவை, சுற்றுச்சூழல் மற்றும் அணைக்கான குறைந்தபட்ச இருப்புக்காக 10 டி.எம்.சி நீரை ஒதுக்க வேண்டியுள்ளது. பாசனத்திற்காக நாளொன்றுக்கு திறக்கப்பட்டு வரும் 15,003 கன அடி (1.2963 டி.எம்.சி) நீர் திறப்பு இதே அளவில் தொடர்ந்தால், அணையில் உள்ள நீர் இன்னும் 18 நாட்களுக்கு மட்டுமே போதுமானதாக இருக்கும். இது சம்பா மற்றும் தாளடி சாகுபடி பணிகளைத் தொடங்கியுள்ள விவசாயிகள் மற்றும் நீர் மேலாண்மை வல்லுநர்களிடையே பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.